www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

170

# கைதான ரோகன விஜயவீரவும் தயாரான கனத்தை மயானமும்

கட்டுக்கோப்பான அமைப்பை கட்டியமைப்பது மட்டும் போதாது, அதனைத் தொடர்ந்து தக்கவைப்பதும் முக்கியம்.

1971ல் ஆயுதமேந்திய கிளர்ச்சி அடக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டனர். அப் புயலில் வீழ்ந்த அமைப்பை மறுபடியும் கட்டியெழுப்பினார்கள் ரோகன விஜயவீரவும், அவர் தோழர்களும்.

அது ஒரு சாதனைதான். உறுதியான உழைப்பின் பயன்தான். கடின முயற்சியின் அறுவடைதான்.

1971 காலம்வரையான வரலாற்றில் இலங்கையில் முதலாவது பாரிய ஆயுதக் கிளர்ச்சியை நடத்திய இயக்கம் ஜே.வி.பி. அதுபோல மாபெரும் அழிவில் இருந்து மீண்டும் ஆயுதப் போராட்டத்திற்கு தயாரான முதலாவது இயக்கமும் ஜே.வி.பி. தான்.

அதேசமயம் அளவுக்கு மீறிய உறுப்பினர் சேர்க்கையால் பாரிய நாசத்தை சந்தித்த அனுபவத்தையும் ஜே.வி.பி.யிடம் இருந்து கற்றுக் கொள்ளலாம்.

## உள்வாங்கல்

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து எழுந்த இந்திய எதிர்ப்பு அலையை பயன்படுத்தி ஆயிரக்கணக்கான புதிய உறுப்பினர்களை உள்வாங்கியது ஜே.வி.பி.

வேலை இல்லாத் திண்டாட்டத்தால் விரக்தியுற்றிருந்த இளைஞர்கள் ஜே.வி.பி. நோக்கிச் சென்றனர்.

தமக்கு வேலை வழங்க முடியாத சமுக அமைப்புமீதும், முதலாளித்துவ அரசுமீதும் அவர்களுக்கு இருந்த கோபம், ஆயுதம் ஏந்தும் பாதையில் செல்ல அவர்களைத் தூண்டியது.

ஆனால், அரச படைகளின் தேடுதல் வேட்டைகளுக்குத் தப்பி தலைமறைவாக இருந்த ஜே.வி.பி. தலைவர்களால் தமது இயக்கத்தில் புதிதாக சேர்ந்து கொண்டிருந்த உறுப்பினர்களை கட்டுப்பாட்டுடன் வளர்க்கவோ, கொள்கை அடிப்படையில் பயிற்றுவிக்கவோ சந்தர்ப்பம் இருக்கவில்லை.

விரைவாக ஒரு ஆயுதக் கிளர்ச்சியை நடத்தி ஆட்சியைக் கைப்பற்றும் அவசர மனோபாவமும் ரோகனாவிடம் இருந்தது.

அதனால் புதிய உறுப்பினர்களை ஆயுதபாணியாக்குவதில் ஆர்வம் காட்டப்பட்டதே தவிர, அமைப்பின் கொள்கைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் விசுவாசமானவர்களாக பயிற்றுவிப்பதில் கவனம் செலுத்தப்படவில்லை.

அமைப்பின் தாங்கும் சக்திக்கு மீறிய வகையில் உறுப்பினர் திரட்டப்பட்டமை, அமைப்பின் கட்டுப்பாட்டை மிக மோசமாக பாதிக்கத் தொடங்கியது.

## அதே அனுபவம்

1983ல் இனக் கலவரத்தின் பின்னர் ஏற்பட்ட படுவேகமான ஆட்சேர்ப்பால் தான் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட் போன்ற அமைப்புக்களின் பிற்கால வீழ்ச்சிக்கு வித்திடப்பட்டது.

புலிகளும், ஈரோசும் மட்டும்தான் அந்த அலைக்குள் அடிபட்டுப்போகாமல் நிதானமான ஆட்சேர்ப்பில் ஈடுபட்டனர். தங்கள் அமைப்பின் தாங்கும் சக்திக்கு ஏற்றவகையில் ஆட்களைத் திரட்டினர். அதனால்தான் கட்டுப்பாட்டில் தளர்வை ஏற்படுத்தாமல் கெட்டியான அமைப்பாக புலிகள் வளர முடிந்தது.

கண்டபடி உறுப்பினர்களை திரட்டிவிட்டு அவர்களுக்கு ஊட்டமான உணவு கொடுக்கக்கூட முடியாமலும், உடுதுணிகூட தரமுடியாத நிலையிலும் பஞ்சப்பாட்டு பாடிய இயக்கங்களும் உண்டு. அதனால் பரட்டைத் தலை, கசங்கிக் கந்தலான உடை, கழுத்தில் ஒரு கறுப்பு நூல், அதுதான் புரட்சிகரத் தோழர்களுக்கு அடையாளம் என்று நினைத்துக் கொண்டு உறுப்பினர்களும் அலைந்தனர்.

புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களுக்கு மக்களிடம் நன்மதிப்புக் கெட்டதற்கும், இயக்கங்கள் என்றால் 'காடையர்கள், வேலையற்றதுகள், பிழைக்க வழியில்லாததுகள்' என்று இளப்பமாக நினைக்கப்படவும், ஏனைய இயக்கங்களால் சரியாகப் பராமரிக்க முடியாத இயக்க உறுப்பினர்களின் தோற்றங்களும் நடைமுறைகளும் ஒரு பிரதான காரணம் எனலாம்.

அதே அனுபவம்தான் 1987ன் பின்னர் ஜே.வி.பி.க்கும் ஏற்பட்டது.

## படையினருக்கு எச்சரிக்கை

பெண்களுடன் வம்புக்குப் போவது, ஆயுதத்தைக் காட்டி மிரட்டுவது, ஆண்கள் சிகரெட் பிடித்தால் உதடுகளை பிளேட்டால் கீறுவது, கொள்ளை அடிப்பது என்று தங்கள் இஷ்டப்படியெல்லாம் நடந்து கொள்ளத் தொடங்கினர் ஜே.வி.பி.யின் புதிய உறுப்பினர்கள்.

அதனால் மக்களும் ஜே.வி.பி.யை வெறுக்க ஆரம்பித்தனர். மக்களிடம் இருந்தும் பாதுகாப்புத் தரப்பினருக்கு தகவல்கள் பறக்க ஆரம்பித்தன.

ஹர்த்தால்கள், பகிஷ்கரிப்புக்கள், கொலைகள், கொள்ளைகள், நாள் ஒரு சட்டம் என்று மக்கள் தாங்கமுடியாத அளவுக்கு நெருக்கடிகள் தொடர்ந்தன.

அனைத்துக்கும் சிகரம் வைத்தாற் போல ஜே.வி.பி.யினரால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

அரசின் படைகளில் உள்ள அனைவரும் உடனடியாக விலகிக் கொள்ளவேண்டும். தவறினால் தண்டிக்கப்படுவார்கள். என்று எச்சரித்தது அறிக்கை.

எச்சரிக்கையை உறுதிப்படுத்துவதற்காக படை அதிகாரிகள் சிலரது குடும்பத்தினர் மீது கைவைத்தனர். சுட்டுக் கொன்றனர்.

அடையாள நடவடிக்கை என்றளவில் ஜே.வி.பி. செய்த அந்த நடவடிக்கையை ரஞ்சன் விஜயரத்தினா, பிரேமதாசா போன்றோர் நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.

படைவீரர்களின் குடும்பங்கள் மூன்றில் ஜே.வி.பி. கைவைத்தால், படைவீரர்களின் ஆறு குடும்பங்களை அரச சார்பு ஆயுத பாணிகள் போட்டுத் தள்ளினார்கள்.

அத்தனை பழியும் ஜே.வி.பி.யின் தலையில் விழுந்தது. ஜே.வி.பி.க்கு ஆதரவாக படைக்குள் இருந்த சிப்பாய்கள்கூட ஜே.வி.பி.யை ஒழித்துக் கட்டினால்தான் தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றலாம் என்ற முடிவுக்கு வந்தனர்.

படை அதிகாரிகளின் குடும்பங்களை கொழும்பில் பாதுகாப்பாக தங்கவைத்தது அரசாங்கம். கொழும்பின் ஐந்து நட்சத்திர விடுதிகள் பலவற்றில்கூட படை உயர் அதிகாரிகளின் குடும்பங்கள் தங்கியிருந்தன.

ஜே.வி.பி.க்குள் அரச உளவாளிகளும் புகுந்து கொண்டனர். ரோகன விஜயவீர உட்பட முக்கிய தலைவர்களின் நடமாட்டம், தங்குமிடம் போன்ற தகவல்களை உளவாளிகள் திரட்டத் தொடங்கினர்.

தகவல் கொடுப்பவர்களுக்கு இலட்சக் கணக்கான ரூபாய் பணமும், வெளிநாட்டுக்குச் செல்லும் வசதியும் செய்து தருவதாக உத்தரவாதம் கொடுக்கப்பட்டது.

ஒருபுறம் ஜே.வி.பி.யை பேச்சுக்கு அழைத்துக் கொண்டிருந்தார் பிரேமதாசா. மறுபுறம் ஜே.வி.பி.யை பூண்டோடு ஒழிக்கும் திட்டங்கள் தீட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

## சுற்றிவளைப்பு

ஜே.வி.பி. மற்றும் ஜே.வி.பி.யின் வெகுஜன அமைப்பான டி.ஜே.வி.பி. ஆகியவற்றின் தலைமையகம் பற்றிய துல்லியமான தகவல்கள் பாதுகாப்பு தரப்புக்கு கிடைத்தன.

ஜே.வி.பி.க்கு எதிரான ஒருங்கிணைந்த நடவடிக்கைக் குழுவினர் தலைமையகத்தை முற்றுகையிட்டனர். அங்குதான் ஜே.வி.பி.யின் பொருளாளர் குணரத்ன வணசிங்க என்பவரும் இருந்தார்.



அரசியல் கருத்தரங்கில் விஜயவீர

வசமாக மாட்டிக் கொண்ட நிலையில், அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் மற்றும் ஆயுதங்களை ஒப்படைத்தார் குணரத்ன வணசிங்கா.

அதனையடுத்து ஜே.வி.பி.யின் அரசியல்பீட உறுப்பினர்கள் சிலரும் கைது செய்யப்பட்டனர்.

ஜே.வி.பி.க்குள் ஊடுருவிய உளவாளிகளால்கூட ரோகன விஜயவீரவின் சரியான இருப்பிடத்தை அறிய முடியவில்லை.

அரசியல் பீட உறுப்பினர்களுக்கு மட்டுமே ரோகன விஜயவீரவின் மறைவிடம் தெரிந்திருந்தது.

அதனால் அரசியல் பீட உறுப்பினர் ஒருவரைக் கைதுசெய்தால் போதும், ரோகனாவை மடக்கி விடலாம் என்று திட்டம் தீட்டினர்.

புரட்சிகர சித்தாந்தப்படி கட்டியமைக்கப்படும் இயக்கங்களின் தலைமைப்பீடம் மத்திய கமிட்டி என்று அழைக்கப்படும்.

மத்திய கமிட்டி எடுக்கும் முடிவுகளை அமுல் நடத்தவும், மத்திய கமிட்டியின் இரண்டு கூட்டங்களுக்கு இடையே கட்சிக்கு தலைமை கொடுக்கவும், மத்திய கமிட்டிகூட முடியாத நிலையில் கொள்கை முடிவுகளை எடுக்கவும் கூடிய உறுப்பு அரசியல்பீடம்.

மத்தியகமிட்டி உறுப்பினர்கள் சிலரையும், மத்தியகமிட்டிப் பொதுச் செயலாளரையும் உள்ளடக்கிய உறுப்பே அரசியல் பீடமாகும். மத்திய குழுவில் 40 பேர் இருந்தால், அரசியல் குழுவில் ஏழுபேரோ ஒன்பது பேரோ இருக்கலாம். அடிக்கடி கூடிப்பேச வசதியான தொகையினராக இருப்பதும் நெருக்கடியான காலங்களில் மிக முக்கியம். இல்லையெனில் கூண்டோடு கைதாகும் ஆபத்தும் நேரும்.

ஜே.வி.பி. அரசியல் பீட உறுப்பினர்களில் ஒருவரான பியதாச ரணசிங்க ஒருங்கிணைப்பு நடவடிக்கைக் குழுவால் கைது செய்யப்பட்டார். அவருக்கு 40 வயது.



இறுதியானவிசாரணையின் போது ரோகன

1980ல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதால் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர். இயக்கப் பெயர் தேவ பண்டாரகே.

தேவ பண்டாரகேவை உளவாளிகள் காட்டிக் கொடுத்தனர், அவரை சித்திரவதை செய்து ரோகனாவின் மறைவிடத்தை கண்டு பிடித்தனர். நுவரெலியா உலப்பனவில் சென் மேரீஸ் தோட்டத்தில் ரோகனா மறைந்திருப்பது தெரிந்ததும் பாதுகாப்பு தரப்புக்கு தலைகால் புரியாத சந்தோசம். உடனே பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சனுக்கு தகவல் பறந்தது.

நம்பகமான ஆட்களுடன் சென்று ரோகனாவை கைது செய்ய வேண்டும். விசாரித்துவிட்டு கொன்றுவிடவேண்டும் என்று முடிவு செய்தனர். ரஞ்சன் பச்சைக் கொடி காட்டிவிட்டார். பிரேமதாசாவிடம்கூட ரஞ்சன் முழுத் தகவல்களையும் உடனடியாகத் தெரிவிக்கவில்லை.

## பிடிபட்டார்

1989 நவம்பர் 12ம் திகதி.

சென்மேரிஸ் தோட்ட வீடு இரகசியமாக கண்காணிக்கப்பட்டு, ரோகன விஜயவீர வீட்டில் இருப்பதை உறுதி செய்து கொண்டனர்.

கார் ஒன்றில் அரசியல் பீட உறுப்பினர் முத்து பண்டாரகேயை முன்னால் அனுப்பினார்கள்.

# நடந்தது ஒன்று சொன்னது இன்னொன்று

அப்போதுதான் மதிய உணவை முடித்துவிட்டு தினசரி ஒன்றை புரட்டிக் கொண்டிருந்தார் ரோகனா. மனைவி பிள்ளைகள் உணவருந்திக் கொண்டிருந்தனர்.

கார் வரும் சத்தம் கேட்டதும் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். முத்து பண்டாரகேயின் முகம் தெரிந்ததால் வீட்டை விட்டு வெளியே வந்தார் ரோகனா.

அப்போது அருகில் இருந்த குன்றுகளின் மறைவில் இருந்து சாதாரண உடையில் கையில் ஆயுதங்களுடன் திமுதிமுவென்று பலர் வந்து கொண்டிருப்பதை ரோகனா கண்டாார்.

'ஒருங்கிணைந்த நடவடிக்கைக் குழு' தான் வருகிறது என்பது ரோகனாவுக்கு தெரிந்து விட்டது.

ஓடிவிடலாமா என்று பார்த்தார். நாற்புறமும் சுற்றி வளைக்கப்பட்டுவிட்டது தெரிந்துவிட்டது.

எதிர்ப்பதோ, தப்பி ஓடுவதோ முடியாத காரியம் என்பதால் சூழலுக்கு ஏற்ப நடந்து கொள்ளத் தீர்மானித்த ரோகனா, "நீங்கள் கண்டியில் இருந்தா வருகிறீர்கள்?" என்று கேட்டார்.

கண்டியில் பிரேமதாசா உடுகம்பொலவின் முகாம் இருந்தது. ஜே.வி.பி.யினரை டயர்களில் போட்டு எரித்தது உட்பட பயங்கர வேட்டைகள் நடத்தியவர் பொலிஸ் அதிகாரி பிரேமதாசா உடுகம்பொல.

ரஞ்சன் விஜயரத்னாவுக்கு மிக நம்பிக்கையான பொலிஸ் அதிகாரி.

கேள்விக்கு பதில் சொல்லாமல் "நீதான் லொக்காவா?" (தலைவரா?) என்று கேட்டான் ஒருவன். வந்தவர்களில் அதிகாரி போன்று காணப்பட்ட ஒருவன் ரோகனாவின் தலையில் கைத்துப்பாக்கியை வைத்தபடி ஏதோ கேட்டான்.

ரோகானாவின் மனைவியும், பிள்ளைகளும் வெளியே வந்துவிட்டனர். ரோகனாவைச் சுடப்போகிறார்கள் என்று பயந்து அழத் தொடங்கிவிட்டனர்.

மாலை 3.30 மணியளவில் ஒரு வண்டி ஒன்றின் பின் இருக்கையில் இருவருக்கு மத்தியில் ரோகனாவை இருத்தி வைத்து கூட்டிச் சென்றனர்.

அவர்களுடன் செல்ல முன்னர் ரோகனா தன் மனைவியின் முகத்தையும், பிள்ளைகளின் முகத்தையும் கடைசித் தடவையாக ஆழமாக நோக்கினார்.

'பிள்ளைகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்' என்று கூறியதுதான் தன் மனைவியிடம் ரோகனா பேசிய கடைசி வார்த்தை.

கொழும்பில் உள்ள ஒருங்கிணைந்த நட வடிக்கை தலைமையகத்துக்கு ரோகனா கொண்டுவரப்பட்டார். துருவித் துருவி விசாரிக்கப்பட்டார். மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரட்னாவின் பொறுப்பின் கீழ் இயங்கியதுதான் ஒருங்கிணைந்த நடவடிக்கைக்குழு.

"உங்களை ஒன்றும் செய்யமாட்டோம். உங்கள் உறுப்பினர்களிடம் சகல வன்முறைகளையும் நிறுத்துமாறு வேண்டுகோள் விடுங்கள்." என்றனர்.

ரோகனா மறுத்தார். ஆனால் தொடர்ந்து பிடிவாதம் காட்டமுடியாதளவுக்கு களைத்துப் போயிருந்தார்.

தொலைக்காட்சி கமரா ஒன்று அவர் முன்னால் வைக்கப்பட்டது. சற்று நேரம் அவகாசம் கேட்டபோதும், வழங்கப்படவில்லை.

## தகன ஏற்பாடுகள்

ரோகனா விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோதே, பொரளையில் உள்ள கனத்தை மயானத்தை சுற்றி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன.

அங்குதான் ரோகனாவின் உடலை தகனம் செய்ய ஏற்பாடாகி இருந்தது.

ரோகனா பேசியதை பதிவு செய்து முடித்தனர். ரோகனாவுக்கு தன்னை கொல்லப் போகிறார்கள் என்பது ஓரளவு புரிந்துவிட்டது.

"ஜனாதிபதி பிரேமதாசாவுடன் நான் சில விஷயங்களைப் பேச விரும்புகிறேன்" என்று கூறினார் ரோகனா.

அத் தகவலை உடனடியாக ரஞ்சனுக்கு தெரிவித்தனர்.

பிரேமதாசாவுடன் ரோகனாவை பேச விட்டால், பிரேமதாசா மனம்மாறிவிடவும் கூடும். ரோகனாவை தன்னுடன் சேர்த்துக் கொண்டு அரசியல் நடத்தவும் நினைக்கலாம்.

ஆகவே சந்திக்கவிடக்கூடாது என்று முடிவு செய்த ரஞ்சன், "அதற்கு அவசியமில்லை, முடித்துவிடுங்கள்" என்று கூறிவிட்டாராம்.

கொழும்பில் கோல்ஃப் விளையாட்டு மைதானத்திற்கு பக்கத்தில் இருந்த ஒருங்கிணைந்த நடவடிக்கைக் குழு அறையில் வைத்துத்தான் ரோகனா விசாரிக்கப்பட்டார்.

கோல்ஃப் மைதானத்திற்கு ரோகனாவை கூட்டிச் சென்று அங்கு வைத்துத்தான் துப்பாக்கி ரவைகளைப் பொழிந்தனர் என்றும் அறியப்படுகிறது.

இத்தகவலை அன்றைய எதிர்க்கட்சி பா.உ லக்ஷ்மன் ஜயக்கொடியும் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார். கோல்ஃப் மைதானத்தில் வைத்து ரோகனா சுடப்பட்டதை அப்பகுதி வாசிகள் சிலர் கண்டனர் என்றும் ஜயக்கொடி கூறியிருந்தார்.

ரோகனாவை சுட்டுக் கொன்றுவிட்டு உடலையும் தகனம் செய்த பின்னர்கூட, ரோகனா கைதான தகவலை அரசாங்கம் மிக இரகசியமாக வைத்திருந்தது.

ஜே.வி.பி.யின் முக்கிய தலைவர்களான உபதிஸ்ஸ கமநாயக்கா உட்பட பலரது இருப்பிடங்கள் பற்றிய தகவல்களை பெற்று அவர்களும் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மீண்டும் ஜே.வி.பி.க்கு தலைமை தாங்கக் கூடிய தலைவர்கள் எவருக்கும் தலை இருக்கக்கூடாது என்று ரஞ்சன் விஜயரத்தினா திட்டவட்டமாக உத்தரவிட்டிருந்தார்.

தாம் நினைத்தபடி காரியம் யாவும் முடிந்ததும் இராணுவத் தளபதியால் அறிக்கை ஒன்று விடுக்கப்பட்டது.

பாதுகாப்பு தரப்பினர் தமது தேவை கருதியும், தந்திரத்துக்கு ஏற்பவும் உண்மைகளைத் திரித்துக் கூறவும், தவறான தகவல்களை வெளியிடவும் தயங்கமாட்டார்கள் என்பதற்கு இந்த அறிக்கை தக்க உதாரணம். அறிக்கை இதுதான்:

"அரசைக் கவிழ்க்கும் வன்முறைகளுக்கு தூண்டுவோரைப் பற்றிய உளவுத் தகவல்களின்படி உலப்பனப் பகுதியில் தேடுதல் நடத்தி னோம்.

1989 நவம்பர் 12ம் திகதி ரோகனா விஜவீர என்பவரை அடையாளம் கண்டு விசாரித்தபோது, 'நான்தான் விஜயவீர' என்று ஒப்புக்கொண்டார்.

அவரைக் கைது செய்து மிகவும் பாதுகாப்பான இடத்தில் வைத்து விசாரித்தோம். அவர் தானாகவே விரும்பிக் கேட்டுக் கொண்டதால், வீடியோவில் அவரது அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

நவம்பர் 13ம் திகதி காலையில் தமது தலைமையகத்திற்கு பாதுகாப்புப்படை மற்றும் பொலிசாரைக் கொண்ட குழுவினரை அழைத்துச் சென்றார்.

அங்கு அரசியல் பிரிவு முக்கியஸ்தரான ஹேரத் என்பவரிடம் விசாரணைக்குரிய ஆவணங்கள் அனைத்தையும் கையளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஹேரத் சில ஆவணங்களை ஒப்படைத்தார். வேறு சில ஆவணங்களை தேடிப்பார்ப்பது போன்று பாசாங்கு செய்துவிட்டு திடீரென ஒரு துப்பாக்கியை எடுத்து ரோகன விஜயவீராவை நோக்கிச் சுட்டார்.

படையினரும் உடனடியாக ஹேரத்தைச் சுட்டனர். அதனால் படுகாயமடைந்த நிலையில் ரோகன விஜயவீரவும், ஹேரத்தும் உயிர் துறந்தனர்.

இதன் பின்னர் அவசரகால சட்ட விதிகளுக்கு அமைய, அவர்கள் இருவருடைய சடலங்களும் உயர் பாதுகாப்புடன் தகனம் செய்யப்பட்டன."

அதுதான் அறிக்கை.

நடந்தது வேறு. நடந்ததாக ஜோடிக்கப்பட்ட சம்பவங்கள் முற்றிலும் வேறு.

ஜே.வி.பி. தலைமையகம் உட்பட ரோகனாவை பிடிக்க உதவிகரமான தகவல்களைக் கூறிய உளவாளி ஒருவருக்கு ஏழு இலட்சம் ரூபா சன்மானம் கொடுக்கப்பட்டதாகவும் தகவல். அந்த உளவாளியின் பெயர் இன்றுவரை இரகசியமாகவே இருக்கிறது.

ரோகனா விஜயவீராவின் மனைவியும் பிள்ளைகளும் தற்போதும் கடற்படைப் பாதுகாப்பில் திருமலையில் உள்ளனர்.

ரோகனாவின் மகள் படிப்பில் கெட்டிக்காரி. பல பரிசுகளையும் பெற்றுள்ளார்.

ரோகனா இறுதிவரை தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளவில்லை.

கொழும்பில் இருந்த தமிழ் முதலாளிகள் மீதும் கடுப்பில் இருந்தவர் ரோகனா. கே. குணரத்னமும் ஜே.வி.பி.யினரால் தான் கொல்லப்பட்டார்.

தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை வகுப்புவாதப் போராட்டம், தமிழ் முதலாளிகளுக்கும், ஏகாதிபத்தியவாதிகளுக்கும் சார்பான போராட்டம் என்றும் ரோகனாவும் ஜே.வி.பி.யும் கொச்சைப் படுத்தி வந்ததையும் இந்த நேரத்தில் நினைவூட்டியே ஆக வேண்டும்.

ஜே.வி.பி. வீழ்ந்ததால் அடுத்த காயை நகர்த்த ஆரம்பித்தார் பிரேமதாசா.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்